---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தென்னை பயிர்ச் செய்கை சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சபையின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.அந்நியமங்களின் கீழானஎனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்துவிடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபை தொடர்ந்து செயற்படுத்துவதற்கான அதன் ஆற்றலினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிஇல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறையை மேற்பார்வை செய்தல் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடப்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள்

பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | உரிய நியங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்துக்கள் உரித்தாகும் சொத்து தொகுதி முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்றாலும், தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு சொந்தமான 288 வாகனங்களில் 272 வாகனங்கள் மட்டுமே மீள்மதிப்பீடு செய்யப்பட்டு ரூபா 9,713,924 கிரயமான 16 வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை. | தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு சொந்தமான அனைத்து வாகனங்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பு 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி, மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்துக்கள் உரித்தாகும் சொத்து தொகுதி முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 29 மற்றும் 30 ஆம் பந்திகளுக்கு முரணாக 09 ஒப்பந்தங்களின் மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 2,888,819 ஆனது நடைமுறை வேலை கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஒப்பந்தக் கடன் கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டது. | 02 வருடங்களைத் விஞ்சிய மற்றும் இதுவரை முடிக்கப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களும் 2023 ஆம் ஆண்டில் நடைமுறை வேலை கணக்கிலிருந்து அடையாளம் காணப்பட்டு இணக்கம் செய்யப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறைவு செய்யப்பட்ட பணியின் அளவு தொடர்பான செலவுகள் மட்டுமே நடைமுறை வேலை கணக்கில் கணக்கில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 இன் 47(அ) ஆம் பந்தியின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையின் இறுதி இருருப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள நிராகரிக்கப்பட்ட மற்றும் தோல்வியடைந்த 649,101 தேங்காய்கள் மற்றும் தென்னை மரக்கன்றுகளின் பெறுமதி ரூபா 4,536,707 இருப்பினை மதிப்பீடு செய்வதற்கு திட்டவட்டமான கணக்கீட்டு கொள்கையொன்று நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்படவில்லை. | தென்னை பயிர்ச்செய்கை சபையின் மாதிரி தென்னந்தோப்புகள் மற்றும் தென்னை நாற்று மேடைகள் தொடர்பான தோல்வியடைந்த மற்றும் நிராகரிக்கப்பட்ட இறுதி இருப்பினை மதிப்பிடுவதற்கு சந்தையில் அத்தகைய இறுதி இருப்பு் விற்கப்பட்ட ஆகக் குறைந்த விலை பயன்படுத்தப்பட்டது. | இருப்பு மதிப்பீட்டின் திட்டவட்டமான கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) சபையின் பயன்பாட்டிற்காக ஏனைய நிறுவனங்களால் வழங்கப்பட்ட 17 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 24,375,372 மதிப்பில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு சபையன் ஆதனம், பொறி மற்றும் உபகரணமாக கணக்கிடப்பட்டது. | தென்னை பயிர்ச்செய்கைச் சபைக்குச் சொந்தமில்லாத 16 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டிராததுடன், 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த கணக்கைத் தயாரிக்கும் போது திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபையினால் பயன்படுத்தும் வாகனங்களை சபை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், சபைக்கு சொந்தமான வாகனங்களை மட்டுமே நிதிக்கூற்றுக்களில் காட்ட வேண்டும். |
| (ஆ) மீள்மதிப்பீடு செய்யப்பட்ட 05 வாகனங்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,275,000 ஆன போதிலும், அது | மீள்மதிப்பீடு செய்யப்பட்ட 05 வாகனங்களின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி குறைவாக கணக்கு வைக்கப்பட்டமையால், 2023 ஆம் | சொத்துக்களின் மீளமதிப்பீட்டு பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 963,600 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால், நிலையான சொத்துக்கள் ரூபா 311,400 இனால் குறை கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டது. | ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | துல்லியமாக பிரதிபலிக்கப்பட வேண்டும். |
| (இ) | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 1,950,000 பெறுமதியான 2 வாகனங்கள் சபையின் சொத்தாகக் கணக்கில் வைக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டில் அந்த வாகனங்கள் மீள ஒப்படைக்கப்பட்ட போதிலும், அவை கணக்கிலிருந்து நீக்கப்படவில்லை. | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிடம் மீள ஒப்படைக்கப்பட்ட ரூபா 1,950,000 பெறுமதியான 2 வாகனங்களின் பெறுமதி 2023 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கையை தயாரிப்பதில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான வாகனங்களை முறையாக கண்டறிந்து கணக்கு வைக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் சபைக்கு உரித்தற்ற ரூபா 13,095,245 மதிப்புள்ள 17 காணிகள் கணக்கில் வைக்கப்பட்டிருந்ததால், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அந்த அளவினால் மிகையாக மதிப்பிடப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிப்பதில், தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு சொந்தமில்லாத காணிகள், நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் சரிசெய்யப்பட்டுள்ளது. | காணிகளை முறையாகக் கண்டறிந்து கணக்கு வைக்க வேண்டும். |
| (உ) | குருநாகல் மாவட்டத்தில் மஹாயாய மாதிரி தென்னந்தோப்புக்கு சொந்தமான 331 ஏக்கர 1 ரூட் பரப்பளவான காணி 1964 இன் 28 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு (திருத்தம்) சட்டத்தின் கீழ் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், சொத்துக்கள் கணக்கில் காட்டப்படாததால் காணியின் பெறுமதி குறைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது. | மஹாயாய மாதிரி தென்னந்தோப்பில் உதவி பிராந்திய செயலாளரால் ஒதுக்கப்பட்ட 331 ஏக்கர் 1 ரூட் நிலத்தின் மதிப்பு நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்படவில்லை என்பதுடன், அது 2023 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான காணிகளை முறையாக கண்டறிந்து கணக்கு வைக்க வேண்டும். |
| (ஊ) | இலங்கை மகாவலி அதிகாரசபையிடமிருந்து குத்தகை அடிப்படையில் சுவீகரிக்கப்பட்ட 93 ஏக்கர் 1 ரூட் 15 பேர்ச் பரப்பளவான காணி மற்றும் சேருவாவில மங்கள ரஜமஹா விகாரையிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட 25 ஏக்கர் காணிக்கு இதுவரை குத்தகை செலுத்தப்படவில்லை மற்றும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. | மகாவலி அதிகாரசபையினால் கையகப்படுத்தப்பட்ட எம்பிலிப்பிட்டிய, உள்ஹிட்டிய நாற்றங்கால் மற்றும் சேருவாவில மங்கள ரஜமஹா விகாரை ஆகிய காணிகளை காணி உரிமையாளர்கள் இதுவரையில் அந்தந்த காணிகளுக்கு மதிப்பீடு செய்து வருடாந்த குத்தகை அறிவித்தல்களை தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு வழங்கவில்லை. எனவே, குத்தகை ஒதுக்கீடு செய்யப்படவில்லை. | சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முறையான குத்தகை ஒப்பந்தங்களை செய்துகொண்டு, குத்தகைக் கொடுப்பனவுகளை உரிய நேரத்தில் செலுத்துவதன் மூலம் நிதிக் கட்டுப்பாடு சிரமங்களைத் தவிர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (எ) | இருப்பு மதிப்பீட்டு அறிக்கைகளின் படி, சபைக்கு சொந்தமான ரூபா 9,517,861 மதிப்புள்ள 48,683 தரைத் தென்னைக் கன்றுகளும், 4,483 தொட்டி தென்னை மரக்கன்றுகளும் இருப்பு கணக்கில் அதிகமாகக் கணக்கிடப்பட்டுள்ளன. | 2022/12/31 ஆந் திகதியில் உள்ளபடியான பொருள் மற்றும் இருப்பு மொய்மையாய்வு அறிக்கைகளின்படி, தரைத் தென்னை மரக்கன்றுகளின் அலகுகளின் அளவு சரிபார்க்கப்பட்டு, அதற்குரிய பிழை பின்னோக்கிய சரிசெய்தல் கணக்கில் மாற்றப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது. | சரியான இருப்பு பெறுமதியை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் திருத்தப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதியில், தேங்காய் ஏலத்தின் மூலம் ரூபா 230,305,040 வருமானம் ஈட்டப்பட்டது, ஆனால் நிதிச் செயல்திறன் அறிக்கையில் அது ரூபா 235,158,803 ஆக வருமானம் ரூபா 4,848,763 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | ஏலத்தில் விற்கப்படும் தேங்காய்களுக்கு கிடைக்கும் மொத்தத் தொகையை தேங்காய் வருமானமாகப் பதிவு செய்வதுதான் இதுவரை தெங்கு பயிர்ச்செய்கை சபையின் நடைமுறை ஆகும். மேலும், கணக்கீட்டு ஆண்டின் கடைசி நாளில் அதிக தேங்காய் வருமானம் மொத்த தேங்காய் வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில், இந்த அதிகப்படியான தேங்காய் வருமானத்தை திருப்பிச் செலுத்தும் போது, 2022 ஆம் ஆண்டு தொடர்பான பெறுமதி அங்கீகரிக்கப்பட்டு, அடுத்தடுத்த சரிசெய்தல் கணக்கில் சரி செய்யப்பட்டு சரி செய்யப்பட்டது. | தேங்காய் ஏல வருமானம் சபையின் கணக்குகளில் துல்லியமாக காண்பிக்க வேண்டும். |
| (ஐ) | 2022 ஆம் ஆண்டு ஏலத்தில் தேங்காய் விற்பனைக்காக தரகருக்குச் செலுத்த வேண்டிய 1 சதவீதத்தில் ரூபா 2,326,314 என்ற தரகுக் கட்டணம் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகளாக இனங்காணப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல், ஏலத்தில் விற்கப்படும் தேங்காய்களுக்கு அந்தந்த தரகு நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய 1% (விற்பனை விலையில் 1%) தரகுக் கட்டணம் கடன் கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தரகு கட்டண பொறுப்பு என்பது துல்லியமாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (ஒ) | 2022 ஆம் ஆண்டில் ஏலம் விடப்பட்ட தேங்காய்களில் இருந்து வாங்குபவரால் நிராகரிக்கப்பட்ட 124,455 தேங்காய்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 7,555,455 பெறுமதி நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாகக் காட்டப்படவில்லை. | ஏலத்தில் விற்கப்படும் தேங்காய்களுக்கு கிடைக்கும் வருமானம் தேங்காய் வருமானத்தில் பதிவு செய்யப்படுகிறது. ஆனால், வாங்குபவர் அந்தந்த தேங்காயை தோட்டத்தில் இருந்து எடுக்கும்போது, கூறப்பட்ட தேங்காய்களின் நிகர வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது. அதன்படி, வருங்கால கணக்கு அறிக்கைகள் தயாரிப்பில், சம்பந்தப்பட்ட கணக்கு ஆண்டு முடிவடைந்த பின், அந்த ஆண்டு தொடர்பான அதிகப்படியான தென்னை வருமானம் திரும்ப அளிக்கப்பட்டால், அதை அடுத்தடுத்த சரிசெய்தல் கணக்கில் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகள் துல்லியமாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஓ) | 2014 ஆம் ஆண்டில், கட்டிடத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட குருநாகல் | குருநாகல் முகாமையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது | முடிக்கப்பட்ட பணியின் அளவு தொடர்பான |

| | | | |
|---|---|---|---|
| | முகாமையாளரின் உத்தியோகபூர்வ இல்லம் II கட்டத்திற்கான ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படவில்லை, ஆனால் மொத்த ஒப்பந்த பெறுமதியான ரூபா 2,838,619 நடைமுறை வேலை கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு, கடன் கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அந்த ஒப்பந்தம் மீள ரூபா 2,897,636 தொகைக்கு கையளிக்கப்பட்டு அந்த ஒப்பந்த பெறுமதியும் மீண்டும் நடைமுறை வேலை கணக்கில் மற்றும் கடன் கொடுத்தோர் கணக்கில் பதிவு செய்யப்பட்டமையால் நடைமுறை வேலை கணக்கு மற்றும் ஒப்பந்த கடன் கொடுத்தோர் கணக்கு, ஆகியவை ரூபா 5,156,728 அதிகமாகக் கணக்கிடப்பட்டன. | நிறைவடைந்துள்ளதால், 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட கணக்கீட்டு பிழைகளுக்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 2023 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை தயாரிப்பதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | செலவுகள் மட்டுமே நடைமுறை வேலை கணக்கில் காட்டப்பட வேண்டும். |
| (ஔ) | ரூபா 2,760,971 மதிப்பிலான 3 ஒப்பந்தங்கள், மூலதனமாக்கப்படாது நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,760,971 மதிப்பிலான ஒப்பந்தத்தின் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன என்பதால் 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது பூர்த்தி செய்யப்படாத பணிகள் கணக்கில் மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கட்டுமான ஒப்பந்தங்கள் முடிந்தவுடன் பணி நிறைவடைந்தமைக்கான சான்றிதழின் அடிப்படையில் சொத்துக்கள் உடனடியாக மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (க) | லுணுவில தெங்கு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் ஒப்பந்தத்திற்கான ஆரம்ப நிலுவையில் மதிப்பிடப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியான ரூபா 2,991,470 தொகை நடைமுறை வேலைகள் மற்றும் கடன் கொடுத்தோர் என்பவற்றில் சேர்க்கப்பட்டு, வேலையின் முன்னேற்றக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு கட்டிடப் பராமரிப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில். இந்த ஒப்பந்தத்திற்காக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,766,425 தொகையை கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டு இருந்ததுடன், நடைமுறை வேலை கணக்கு ரூபா 1,766,425 | லுணுவில தெங்கு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான விடுதி மற்றும் சாப்பாட்டு அறை விரிவாக்கம் பழைய கட்டிடத்தில் செய்யப்பட்ட பழுதுபார்த்தல் என்பதால், மீளாய்வாண்டில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு கணக்கில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கட்டுமான ஒப்பந்தங்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகவும், ஆண்டின் மிகை ரூபா 2,991,470 ஆகவும், கடன் கொடுத்தோர் ரூபா 1,225,045 இனாலும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (கா) | பெறுமதி ரூபா 1,816,975 தொகையான மயூரபுர தென்னை நாற்றங்கால் நீர் வழங்கல் முறை மீளாய்வாண்டிற்குள் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டில் அந்த மதிப்பில் ரூபா 726,790 மட்டுமே மூலதனமாக்கப்பட்டது, மீதமுள்ள ரூபா 1,090,185 மூலதனமாக்கப்படவில்லை மற்றும் பெறுமானத் தேய்வு சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில், ஹம்பாந்தோட்டை மயூரபுர தென்னை நாற்று நடுகையின் நீர் விநியோகத்தை மூலதனமாக்குவதற்கும் அது தொடர்பான பெறுமானத் தேய்வு சீராக்கம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | ஒப்பந்த வேலை முடிந்த பிறகு சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும் மற்றும் பெறுமானத் தேய்வு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (கி) | இரத்தினபுரி பிரதேச அலுவலகத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் ரூபா 7,306,023 ஆல் மீள் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 14,072,048 என கணக்கிட்டதன் காரணமாக சொத்துக்கள் ரூபா 7,306,025 ஆல் மிகையாகக் கணக்கிடப்பட்டன. | இரத்தினபுரி பிராந்திய காரியாலயத்திற்குச் சொந்தமான தளபாடங்கள் மற்றும் சாதனங்களின் மீள் மதிப்பிடப்பட்ட பெறுமதி மிகையாக மதிப்பிடப்பட்டுள்ளமை கடந்த 2023.12.31 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் மீள் மதிப்பிடப்பட்டு சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (கீ) | உத்தியோகபூர்வ இணையத்தளத்தை உருவாக்குவதற்கு பகுதி அடிப்படையில் செலுத்தப்பட்ட ரூபா 1,106,000 தொகையின் மூலதனமாக்கல் காரணமாக, அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் சாதனங்கள் கணக்கு மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது. | தெங்கு பயிர்ச்செய்கை சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் உருவாக்கம் 2023 ஆம் ஆண்டு நிறைவடைந்ததால், அதன் பெறுமதி கட்டுபுலச் சொத்துகளின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (கு) | நீர்கொழும்பு விதை தென்னை அலகிற்கு புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 2,149,974 செலுத்தப்பட்டு நடைமுறை வேலையின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அந்த கட்டுமானத்தை மேற்கொள்ளக் கூடாது என சபை முடிவு செய்ததால், அந்த செலவினம் விளைவற்ற | நீர்கொழும்பு விதை தென்னை உற்பத்தி அலகுக்கு சொந்தமான புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக தனியார் ஆலோசனை நிறுவனத்திற்கு ஆலோசனைக் கட்டணமாக 2017 ஆம் ஆண்டு ரூபா 2,149,974.00 செலுத்தப்பட்டது. குறித்த ஆலோசனை நிறுவனத்தினால் கட்டிடம் கட்டுவதற்கு ரூபா 459 மில்லியன் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தென்னை பயிர்ச்செய்கை சபையினால் இவ்வளவு பாரிய செலவை தாங்க முடியாத | ஆலோசனைக் கட்டணத்தை மீள அறவிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினமாகி இருந்த போதிலும், கணக்குகளில் உரிய சீராக்கங்கள் செய்யப்படாதிருந்ததுடன், சட்ட வழியில் செலுத்திய தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலையில், அதற்கு பதிலாக உரிய கட்டிடத்தை திறம்பட பழுதுபார்ப்பதற்கு தென்னை பயிர்ச்செய்கை சபை தீர்மானித்துள்ளது. | |
| (கெ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின்படி, தொட்டி தென்னை மரக்கன்றுகளின் அலகுகளின் எண்ணிக்கை 620,043 அலகுகளாக இருந்தது, ஆனால் நிதிக்கூற்றுகளில் இது 624,526 அலகுகள் என 4,483 அலகுகளால் அதிகமாக இருந்தது, எனவே தொட்டி தென்னை மரக்கன்றுகளின் இறுதி இருப்பு பெறுமதி ரூபா 1,276,803 இனால் அதிகமாகக் கணக்கிடப்பட்டன. | 2022/12/31 ஆந் திகதியில் உள்ளபடியாக பொருள் மற்றும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளின்படி, தொட்டி தென்னை மரக்கன்றுகளின் அலகு அளவு சரிபார்க்கப்பட்டு, தொடர்புடைய பிழையானது பின்னோக்கிய சரிசெய்தல் கணக்கில் மாற்றப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது. | தொட்டி தென்னை மரக்கன்றுகளின் இருப்பின பெறுமதி நிதிக்கூற்றுக்களில் திருத்தப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் எண்பத்தி ஆறு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,062,332 கூட்டுத்தொகையான இடர் கடன்கள், விழா முன்பணங்கள் மற்றும் சிறப்பு சம்பள முன்பணங்கள் ஆகியவை 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன. மேலும், 09 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் வரை வசூலிக்கப்படாத விழா முன்பணம் ரூபா 80,000 ஆகவும், சேவையை விட்டு வெளியேறிய 24 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 2 முதல் 5 ஆண்டுகளுக்கு நிலுவையில் உள்ள இடர் கடன் மீதி ரூபா 870,321 ஆகவும் இருந்தது. இந்த பணத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தென்னை பயிர்ச்செய்கை சபையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு நிலுவையில் உள்ள இடர் கடன்களில் திரு ஏ.எம்.டீ.ஏ. பண்டார அவர்களை தவிர ஏனைய ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திரு. ஏ.எம்.டி.ஏ. பண்டார அவர்களின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால், இடர் கடன் தொகையை எதிர்காலத்தில் வசூலிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 51 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 255,000.00 விசேட சம்பள முன்பணம் இதுவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 11 ஒப்பந்த கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 15,041,203 கூட்டுத்தொகை மற்றும் 11 | 11 ஒப்பந்த கடன் கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய மீதிகள் சட்ட சிக்கல்கள் நிலவுகின்ற காரணத்தால் 4 | கட்டுமான பணிகளுக்கு உரியதாக செலுத்த |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களுக்கு செலுத்தாத சம்பளம் ரூபா 335,607 ஆகியவற்றுக்காக 2 முதல் 5 வருடங்கள் வரை காலம் கடந்திருந்த போதிலும் சபையினால் இந்த கடன் கொடுத்தோருக்கு மற்றும் செலுத்தாத சம்பளங்கள் தொடர்பில் ஆராய்ந்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர்கள் நீங்களாக ஏனைய ஒப்பந்ததாரர்களின் மீதிகள் 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 11 உத்தியோகத்திற்கு செலுத்தாத சம்பள மீதிகள் 2023 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டிய பணம் மற்றும் செலுத்தாத சம்பளங்கள் தொடர்பில் தகவல்களை ஆராய்ந்து குறித்த கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவையின் நிதி பிரமாணம் 570 | 02 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரை ஆன காலத்தினை விஞ்சி இருந்த சபையின் 53 நிர்மாண பணிகளுக்கு உரிய ரூபா 5,163,054 தொகையான பிடிக்காசினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது வியாபார கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | சபையின் நிர்மாண பணிகளுக்கு உரியதாக காணப்படும் பிடிக்காசு உரிய ஒப்பந்த காலத்தினை பரிசோதித்து 2023/12/31 ஆம் திகதி நிறைவடையும் ஆண்டின் கணக்கு கூற்றில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கட்டுமான பணிகளுக்கு உரிய பிடி காசினை தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஜனவரி 27 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 02 ஆம் பிரிவு, பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 1/2015 இன் 2.3 ஆம் பந்தி மற்றும் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளரின் 2023 மார்ச் 20 திகதிய PED/P/02/15(i) temp 3 ஆம் இலக்க கடிதம் | செயற்பாட்டில் உள்ள பணிப்பாளர் பதவியில் புதிய நியமனம் ஒன்றினை வழங்குவதிலிருந்து தவிர்த்து இருக்குமாறு தற்போது நியமனம் வழங்கப்பட்டிருப்பின், கூட்டிணைக்கப்பட்ட அதிகாரச் சட்டத்தின் கீழ் அந்த பதவி காணப்படும் எனின் அதிகாரச் சட்டத்தினை திருத்துவதற்கும் அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஒக்தோபர் 12 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத செயற்பாட்டு பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு சாரதியுடன் ஒதுக்கப்பட்ட வாகனம் ஒன்று மற்றும் மாதம் ஒன்றுக்கு எரிபொருள் 115 லிட்டர்களும் | தெங்கு அபிவிருத்தி சபை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு தலைவர் பதவிக்கான உத்தியோ பூர்வ முறையில் அமைச்சரால் நியமிக்கப்பட்ட விதத்தில் தென்னை பயிர்ச்செய்கை சபையின் செயற்பாட்டு பணிப்பாளர் பதவிக்கும் செயற்பாட்டு பணிப்பாளர் ஒருவரை அமைச்சர் நியமித்திருந்தார். அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தென்னை பயிர்ச்செய்கை சபையின் இந்த இரு பதவிகளுக்கும் | பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 60,650 தொகையான மாதாந்த படியும் செலுத்தப்பட்டிருந்தது. | நியமிப்பதற்கும் அகற்றுவதற்கும் அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது. | |
| (இ) | 1999 இன் 35 ஆம் இலக்க பயிர்கள் பாதுகாப்பு சட்டத்தின் 7(5) ஆம் பந்தி | தென்னை இலைகள் வாடுதல் அழுகிப்போதல் நோயினை கட்டுப்படுத்துவதற்காக இனம் காணப்பட்டிருந்த ஒரே ஒரு வழிமுறையான நோய்க்குள்ளாகிய மரங்களை கழற்றி அகற்றுவதற்கு இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் தனிமைப்படுத்தப்பட்ட பூச்சிகள் அல்லது பூச்சிகள் காணப்படுவதாக தகவல் ஏதேனும் கிடைத்தால் அதனை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டிய போதிலும், வெட்டுவதற்காக அடையாளப்படுத்தப்பட்ட போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 13,810 எண்ணிக்கையிலான மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு நோய்க்கு உள்ளாகிய மரங்களை அகற்றாமை கட்டுப்படுத்துவதற்கான தடை ஒன்றாகவும் நோய் பரவுவதற்கான காரணமாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | நோய் தொற்றுக்கொள்ளான மரங்களை வெட்டி அகற்றாதிருத்தல் நோயை கட்டுப்படுத்துவதற்கு தடையொன்று என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், விவசாயிகளால் வெட்டி அகற்றப்பட வேண்டிய மரங்களின் பெரும் எண்ணிக்கையானவை களத்திலிருந்து அகற்றப்படாமையால் தற்போது தென்னை பயிர்ச்செய்கை சபையினால் கிளைபோசிட் எனும் தடுப்பூசி ஏற்றுதல் மூலம் மரங்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காலப்பகுதியில் கிளைபோசிட் இரசாயனம் சந்தையில் இல்லாதிருந்த காரணத்தால் இவ்வாறு நோய்க்கு உள்ளான மரங்கள் களத்தில் எஞ்சியுள்ளன. | நோய்க்கு உள்ளானதாக இனம் காணப்பட்டுள்ள மரங்கள் உடனடியாக அப்புறப்படுத்தப் பட வேண்டும். |
| (ஈ) | 2022 மே 05 ஆம் திகதிய CCB/Criu/CMG & ND/2022-01 ஆம் இலக்க தென்னை பயிற்சி சபையின் உள்ளக சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவு | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் விழும் தேங்காய்களின் அறுவடையானது நூற்றுக்கு 10 சதவீதத்தினை விஞ்சாதவாறு செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், சபைக்கு சொந்தமான 12 மாதிரி தென்னம் தோப்புகளின் 08 தென்னம் தோப்புகளின் 2022 ஆம் ஆண்டின் போது மொத்த தேங்காய் அறுவடையில் விழுந்த தேங்காய்களின் எண்ணிக்கை 11 முதல் 33 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | மாதிரி தென்னம் தோப்புகளில் விழுந்த தேங்காய்களின் சதவீதம் 10% விஞ்சாதிருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு மாதிரி தென்னந் தோப்புகளின் முகாமையாளர்களுக்கு எங்களால் தொடர்ச்சியாக அறிவுரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விழும் தேங்காய்களின் எண்ணிக்கைய குறைத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2016 ஜனவரி 17 ஆம் திகதிய CCB/Criu/CMG & ND/2016-3 ஆம் இலக்க தென்னை பயிர்ச்செய்கை சபையின் உள்ளக சுற்றறிக்கையின் 1 (ii) மற்றும் 2 (i) ஆம் பிரிவுகள் | எந்தவொரு ஒரு வித்திலைத் தாவரம் அல்லது பனை குடும்பத்தை சேர்ந்த தாவரம் ஒன்று பலகையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக அல்லாது பயிரிடப்பட்ட மற்றும் களத்தில் மற்றும் ஒரு பிரிவுக்கு உள்ளடக்கப்பட்ட பயிர்கள் மரங்கள் தொடர்பான பதிவேட்டில் உள்ளடக்கப்படாதத்துடன், 60 சென்றி மீட்டர்கள் சுற்றளவினை கொண்டிடாத பயிர்களும் இந்த பதிவேட்டில் உள்ளடக்கப்படாத போதிலும், மாதிரி பரிசோதனையின் பிரகாரம் ரூபா 1,860,183 பெறுமதியான அந்த மரங்களும் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு இருந்தன. | 2016 ஆம் ஆண்டில் பலகை பெறுமதி உடைய மரங்களின் கணிப்பீடு தொடர்பில் வெளியிடப்பட்ட CCB/Criu/CMG & ND/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையில் ஒரு சில குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றமையால், 2024 ஆம் ஆண்டில் அதனை தற்போதைய நடைமுறைக்கு பொருத்தமானதாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உள்ளக சுற்றறிக்கைகளுக்கு இணங்க செயப்படவேண்டியதுடன், வேைக்கு ஏற்ப சுற்றறிக்கைகளை திருத்தம் செய்து அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 389,622,417 மிகையாக இருந்ததுடன் அதற்கு ஓத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 611,134,769 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 221,512,352 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது கிடைத்த திறைசேரி மானியங்கள் ரூபா 1,179,002,363 இலிருந்து ரூபா 622,520,000 வரை குறைவடைந்தமையும், அமைச்சின் மானியங்கள் ரூபா 404,760,440 இலிருந்து ரூபா 218,424,000 வரை குறைவடைந்தமையும், கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நாற்றுமேடை செலவினம் ரூபா 156,313,897 இனால் அதிகரித்தமையும் இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவினம விடயங்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்டு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| விடயம் | ஆண்டு 2022 ரூபா | 2021 ரூபா | விலகல் ரூபா | விலகல் சதவீதமாக நூற்றுக்கு |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| மீண்டெழும் பெறுவனவுகள் - திறைசேறி | 394,520,000 | 500,000,000 | (105,480,000) | 21 |
| மூலதனப் பெறுவனவுகள் - திறைசேரி | 228,000,000 | 679,002,363 | (451,002,363) | 66 |
| அமைச்சிடமிருந்தான பெறுவனவுகள் | 218,424,000 | 404,760,440 | (186,336,440) | 46 |
| **ஏனைய வருமானங்கள்** | 1,729,554,844 | 1,248,622,320 | 480,932,524 | 39 |
| **செலவினங்கள்** | | | | |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட | 453,373,552 | 767,292,641 | 313,919,089 | 41 |

| | | | | |
|---|---|---|---|---|
| செலவினங்கள் செயற்பாட்டு செலவினங்கள் | 1,727,502,873 | 1,453,957,734 | 273,545,159 | 19 |

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

மீளாய்வாண்டுக்கான நடைமுறை மற்றும் விரைவு சொத்து விகிதங்கள் முறையே 11:1 மற்றும் 7:1 ஆக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அந்த விகிதங்கள் முறையே 3:1 மற்றும் 2:1 ஆக காணப்பட்டன.
மீளாய்வாண்டின் போது இருப்பு மற்றும் குறுங்கால முதலீடுகள் முறையே ரூபா 126,057,168 இனால் மற்றும் ரூபா 713,680,908 இனால் அதிகரித்தமை நடைமுறை மற்றும் துரித சொத்துக்களின் அதிகரிப்புக்கு பிரதானமான காரணமாக அமைந்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் வெலிகம தென்னை இலை வாடுதல் மற்றும் அழுகுதல் நோய் பரவியிருந்த 03 மாவட்டங்களின் 407 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அந்த நோயினை பரிசோதிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீனாவோ ஆண்டின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் சபையினால் 257 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மாத்திரம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறே மாத்திரை மாவட்டத்தின் 319 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 168 பிரிவுகளில் மாத்திரம் நோய்க்கு உள்ளான மரங்கள் பரிசோதிக்க பட்டிருந்ததுடன் 151 பிரிவுகளின் மரங்கள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும் 06 பிரதேச செயலக பிரிவுகளின் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் கூட அமைந்துள்ள காணிகள் பரிசோதிக்கப்படவில்லை என்பது கணக்காயில் வெளிப்படுத்தப்பட்டது. நோய் வலயமாக இனம் காணப்பட்ட மாத்தறை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய 03 மாவட்டங்களில் 2021 ஆம் ஆண்டில் அடையாளமிடப்பட்ட நோய்க்கு உள்ளான மரங்களின் எண்ணிக்கை 7,681 ஆக காணப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டின் போது அந்த | 2022 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகளுக்காக கிடைத்த உறுதி சீட்டுக்களின் பிரகாரம் களத்திலிருந்து அகற்றப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 8,388 ஆக காணப்பட்டதுடன், கொடுப்பனவுகளுக்கு சமர்ப்பிக்கப்படாத போதிலும் விவசாயிகளால் அகற்றப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 9,527 ஆகும். தடுப்பூசி ஏற்றல் மூலம் அகற்றப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 735 ஆகும். அதற்கமையே 2022 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 18,650 ஆகும். 2022 ஆம் ஆண்டில் 18,976 எண்ணிக்கையான மரங்கள் அடையாளம் இடப்பட்டுள்ளன. | நோய்க்கு உள்ளான மரங்களை அகற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கையானது 18,976 ஆக காணப்பட்டது. அதாவது கடந்த வருடத்திற்கு ஒப்பாக 147 சதவீத அதிகரிப்பொன்று காணப்பட்ட போதிலும் 2022 ஆம் ஆண்டில் வெட்டி அகற்றப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 9,044 ஆக அல்லது அடையாளமிடப்பட்ட நோய்க்கு உள்ளான மரங்களின் எண்ணிக்கையில் 47 சதவீதம் மாத்திரம் ஆக காணப்பட்டது | | |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 12 மாதிரி தென்னந்தோப்புகளில், 8 தென்னந்தோப்புகளில் தென்னை பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலப்பரப்பில் 6 முதல் 23 சதவீதம் மட்டுமே தென்னை பயிரிடப்பட்டுள்ளது. | கட்டிடங்கள், சாலைகள், மண், பெரிய மரங்கள், உயர் அழுத்த மின்கம்பிகள் போன்றவற்றால் தென்னை பயிர்ச்செய்கை செய்ய முடியாத நிலப்பரப்பு தென்னை பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலமாக சேர்க்கப்பட்டுள்ளதுடன், அதனால் தென்னை பயிர்ச்செய்கை செய்ய முடியாத நிலப்பரப்பு அதிகரித்துள்ளது. | சபைக்கு சொந்தமான மாதிரி தென்னந்தோப்புகளில் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலத்தை உகந்த அளவில் பயன்படுத்த வேண்டும். |
| (இ) | 2019 இல் பதிவாகியுள்ள வெள்ளை ஈ நோயைக் கட்டுப்படுத்த 2022 ஆம் ஆண்டின் இறுதியில் தெங்கு ஆராய்ச்சி சபையால் பரிந்துரைக்கப்பட்ட இயற்கை வழிமுறைகளான சவர்க்கார நீர், சலவைத் தூள் தண்ணீர், வேப்பெண்ணெய் ஆகியவற்றுக்கு நீரினை கலந்து பாதிக்கப்பட்ட மரங்களுக்குப் பயன்படுத்தல், மஞ்சள் நிற பாலித்தீன் கவரில் கிரீஸ் தடவி மரத்தின் தண்டுகளில் தொங்கவைத்தல் போன்ற முறைகளை பயன்படுத்துவதற்கு மக்கள் ஊக்குவிக்கப்பட்டாலும், நடைமுறையில் உயரமான தென்னை மரங்களுக்கு இந்த முறைகளைப் பயன்படுத்துவதில் உள்ள சிரமம் காரணமாக, நோய் கட்டுப்பாட்டுக்கு ஒரு வெற்றிகரமான தீர்வு கிடைக்கவில்லை என்பதையும் அவதானிக்க முடிந்தது. | தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிய பரிந்துரைகள் தென்னை பயிர்ச்செய்கை சபையால் களத்தில் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிய வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து பரிந்துரைகளும் எங்கள் களப்பணியாளர்களால் செயல்படுத்தப்பட்டன. சில சந்தர்ப்பங்களில் அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது கடினமாக இருந்தாலும், உரிய பரிந்துரைகளுக்கு இணங்க எங்கள் களப்பணியாளர்களால் தேவையான உபகரணங்கள் உடனடியாக வாங்கப்பட்டு களத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. | தெங்கு ஆராய்ச்சி சபையுடன் இணைந்து, வெள்ளை ஈ நோய் கட்டுப்பாடு மற்றும் ஒடுக்குதலுக்கான நிலையான சிகிச்சை முறையொன்று மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான பளை, கோரை, கிர்ட்லேண்ட் மற்றும் போப்பிட்டிய ஆகிய 4 தென்னந்தோப்புகளில், காய்க்காத தென்னை மரங்களின் எண்ணிக்கை மொத்த தென்னை மரங்களின் எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது, ஆனால் அதற்கான காரணங்களை சபையனால் ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுக்கப்படவில்லை. | வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் உள்ள மாதிரி தென்னந்தோப்புகளில் பல வருடகால யுத்தம் காரணமாக பழைய தோட்டம் அழிந்து அபிவிருத்திப் பணிகளும் தடைபட்டன. தற்போது அந்த மாதிரி தென்னந்தோப்புகளில் புதிய தோட்டங்கள் மற்றும் கீழ் நடவுகள் தொடங்கப்பட்டுள்ளன. அதனால், காய்க்காத தென்னை மரங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மற்ற மாதிரி தென்னந்தோப்புகளில் | சபைக்கு சொந்தமான தென்னந்தோப்புகளில் விளைச்சல் தரும் தென்னை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஊடுபயிர்ச்செய்கை தொடங்கப்பட்டுள்ளதால், காய்க்காத தென்னை மரங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. அடுத்த சில ஆண்டுகளில், இந்தத் எண்ணிக்கையை மிகக் குறைந்த அளவிற்கு மாற்ற முடியும். | |
| (உ) | சபைக்கு சொந்தமான ரன்தெனிய, கிர்ட்லண்ட், லெனாவ, கொஹொம்பன, பாசிக்குடா, கோரை, முந்தலம மற்றும் பளை தென்னந்தோப்புகளில் கருவண்டு ஆகிய 8 தென்னந் தோப்புகளில் கருவண்டு சேதத்தினால் அழிக்கப்பட்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டை விட 59 இனாலும், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தென்னை இலை வண்டு சேதத்தினால் அழிந்த தென்னை மரங்களும் 638 இனாலும் அதிகரித்துள்ளது. விலங்குகளினால் ஏற்படுத்தப்படும் சேத அபாயங்களுக்கு பயன்படுத்த வேண்டிய நடைமுறைகள் குறித்து போதிய கவனம் செலுத்தப்பட்டு சேதத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மாதிரி தென்னந்தோப்புகளில் அதிக எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் பயிரிடப்பட்டு பராமரிக்கப்படுவதுடன், மேலும் இந்த தோட்டங்களுக்கு கருப்பு வண்டு சேதம் முக்கிய பூச்சி அச்சுறுத்தலாக உள்ளது. தற்போது அந்த சேதத்தினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாசிக்குடா மாதிரி தென்னந்தோட்டத்தில் 2022 ஆம் ஆண்டு போன்டிஸ்பா சேதமாக 638 தென்னை மரங்கள் பதிவாகியுள்ள போதிலும், அது தென்னை இலைப்புழு சேதமாக திருத்தப்பட வேண்டும். | பல்வேறு பூச்சி அச்சுறுத்தல்களிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2023 ஜுன் 07 ஆந் திகதி நடாத்தப்பட்ட மர மதிப்புடைய மரங்களின் கணக்கெடுப்பு அறிக்கை மற்றும் கிர்ட்லேண்ட் மாதிரி தென்னந்தோட்டத்தின் கள அலுவலர்களின் மரக் கணக்கெடுப்பு தகவல் அறிக்கை தயாரிப்பின் போது, கிர்ட்லேண்ட் மாதிரி தென்னந்தோட்டத்தில் 18 வகையான மரங்களில் 301 மரங்கள் மர மதிப்பு கொண்ட மரங்களின் கணக்கெடுப்பில் சேர்க்கப்படவில்லை மற்றும் 2 வகையான மரங்கள் 12 மரங்கள் அந்த மர மதிப்புடன் மரங்களின் கணக்கெடுப்பில் அதிகமாக உள்ளிடப்பட்டுள்ளன. இவ்வாறு அதிகரித்து உள்ளடக்கப்பட்ட மர மதிப்புள்ள மரங்களின் எண்ணிக்கை 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 186,542,914 மீதியில் சேர்க்கப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது. | தற்போது, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் கிர்ட்லேண்ட் மாதிரி தென்னந்தோட்டத்தில் மரக்கன்றுகள் கணக்கெடுப்பை முழுவதுமாகச் சரிபார்த்து, உரிய திருத்தங்களைச் செய்யப்பட்டுள்ளது. | மாதிரி தென்னந்தோப்புகளில் உள்ள மர மதிப்புள்ள மரங்களின் கணக்கெடுப்பு பதிவேட்டில் சரியான தகவல்களை பதிவு செய்து, நிதிக்கூற்றுக்களில் நிலுவை தொகையை திருத்த வேண்டும். |
| (எ) | பெருந்தோட்ட அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு, தென்னை அபிவிருத்தி அதிகார சபை, | தென்னை பயிர்ச்செய்கைச் சபை சட்டப்பூர்வமான அமைப்பாக இருப்பதால் நேரடியாக அரச | சபை பயன்படுத்தும் வாகனங்களை முறையாக |

| | | | |
|---|---|---|---|
| | நிதி அமைச்சு மற்றும் இரண்டாவது விவசாய செயற்திட்டத்திற்குச் சொந்தமான ரூபா 30,202,375 பெறுமதியான 17 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வாகனங்களை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அவற்றுள் 7 வாகனங்களுக்கு பழுதுபார்க்கும் செலவுகள் ரூபா 3,207,905 மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. இதில் 4 வாகனங்கள் ஓட்ட நிலையில் காணப்படவில்லை. | வாகனத்தை ஒதுக்காததால் இந்த வாகனங்களின் ஆவணங்களை சோதனையிட்டு 09 வாகனங்களை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் பெயரில் கையகப்படுத்தியுள்ளோம். இந்த வாகனங்களின் உரிமையானது சபைக்கு சொந்தமானதாக இல்லாவிட்டாலும், நீண்டகாலமாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் இயங்கும் நிலையிலுள்ள வாகனங்கள் ஆகும். அவற்றை வாகனங்களை இயங்கும் நிலையில் பராமரிக்க எரிபொருள், சேவை மற்றும் பராமரிப்பு கட்டணமாக 2022 ஆம் ஆண்டில் ரூபா 3,207,905 செலவிடப்பட்டுள்ளது. | கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில், சபைக்குச் சொந்தமான 12 மாதிரி தென்னந்தோப்புகளில் 9 இல், மதிப்பிடப்பட்ட தேங்காய் விளைச்சலை உண்மையான தேங்காய் விளைச்சலுடன் ஒப்பிடும் போது, 2 முதல் 19 சதவிகிதம் வரையிலான வரம்பில், உண்மையான விளைச்சல் எதிர்பார்த்த அளவை விட குறைவாக இருந்தது. மேலும், மீளாய்வாண்டில், 12 மாதிரி தென்னந்தோப்புகளில் 5 தென்னை விளைச்சல் 2021 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2 முதல் 10 சதவீதம் வரை குறைந்துள்ளது. | நாட்டில் இரசாயன உரங்கள் இல்லாததால் பல ஆண்டுகளாக தென்னை பயிர்ச்செய்கைக்கு உரம் போட முடியாத நிலை ஏற்பட்டது. இது உற்பத்தித்திறனைக் குறைப்பதில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது மற்றும் 2024 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்ட இரசாயன உரங்களின் பயன்பாடு தொடங்கப்பட்டதால், எதிர்வரும் ஆண்டுகளில் தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கும் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது. | உண்மையான தேங்காய் விளைச்சலை அதிகரிக்க முறையான வேலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். |
| (ஐ) | சபைக்கு சொந்தமான 12 மாதிரி தென்னந்தோப்புகளில் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட CRIC 65 (பச்சை), CRIC 65 (மஞ்சள்), TSR, கப்ருவான, கப்சுவய, கப்சேத மற்றும் DT கலப்பினச் செடிகள். மற்றும் செவ்விளநீர் கன்றுகள் எதுவும் நடப்படவில்லை மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரைக்கப்பட்ட கன்றுகளில் இல்லாத PP2 செடிகள் 2021 ஆம் ஆண்டில 86,499 எண்ணிக்கையும் மற்றும் 2022 ஆம் ஆண்டில் 195,703 எண்ணிக்கையும் சபையின் தென்னந்தோப்புகளில் நடப்பட்டன. | தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தால் தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு உயர்தர விதை தேங்காய்கள் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் மிகக் குறைந்த அளவில் அந்த விதை தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுவதால், 2021, 2022 ஆண்டுகளில் மாதிரி தென்னந்தோப்புகளில் நாற்றுமேடைகளக்க விதை தேங்காய்கள் கிடைக்கவில்லை. | தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் பரிந்துரைக்கும் உயர்தர விதைகளை பெற்று நாற்றுகளை தயார் செய்ய வேண்டும். |
| (ஒ) | சபைக்கு சொந்தமான அனைத்து மாதிரி தென்னந்தோப்புகளிலும் | 2022 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார ஸ்திரமின்மையால், | பாழடைந்த மரக்கன்றுகள் நடும் |

| | | | |
|---|---|---|---|
| | பாழடைந்த மரங்கள் நடுவது குறித்த ஆய்வின் போது, மீளாய்வாண்டில் மகாயா தென்னந்தோப்பில் வெற்றிடங்களில் மரங்கள் நடப்படவில்லை மற்றும் ரந்தெனிய, கெர்ட்லேண்ட், லெனவ, டெய்சிவேலி, கொஹொம்பன, கோரை, முந்தலம், பளை ஆகிய 8 தென்னந் தோப்புகளில் நடப்பட்ட பாழடைந்த மரங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக தோட்டங்களில் இன்னும் பல பாழடைந்த செடிகள் நடப்பட வேண்டியிருந்தது. கணக்காய்வின் போது, நடவுப் பணிகள் முறையாக நடைபெறாமல் இருப்பதும், நடப்பட்ட செடிகளின் எண்ணிக்கையை விட நடவு செய்யப்படும் செடிகளின் அளவு அதிகமாக இருப்பதும் கவனிக்கப்பட்டது. | திட்டமிட்டு பாழடைந்த தென்னை மர நடும் பணிக்கு தேவையான இயந்திரங்கள், எரிபொருள், ஆட்கள் போன்றவற்றைப் பெற முடியாமல், இப்பணியை முறையாக மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டது. இதுவரை, அந்த பாழடைந்த செடிகள் நடப்பட்டுள்ளன. | பணியை சபை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். |
| (ஓ) | சபைக்கு சொந்தமான 77 வாகனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கை 50 மட்டுமே என்பதுடன், தலைமை அலுவலகம், மாதிரி தென்னந்தோப்பு, பிராந்திய அலுவலகங்கள் மற்றும் நாற்று மேடைகளில் 35 சாதிகள் மட்டுமே பணிபுரிகின்றனர். மேலும், தலைமைச் செயலகத்தில் பயன்படுத்தப்படும் 18 வாகனங்களுக்கு 6 சாரதிகள் மட்டுமே உள்ளதால், அலுவலகப் பணிகளுக்கு போதிய ஓட்டுனர்கள் இன்றி வாகனங்கள் விளைவற்று இருப்பதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சபையில் உள்ள சாரதி வெற்றிடங்கள் உட்பட அனைத்து வெற்றிடங்களையும் பூர்த்தி செய்வதற்காக, விரிவான அறிக்கைகள் 2024.01.02 மற்றும் 2024.03.05 திகதிய கடிதங்கள் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், தற்போதைய சாரதி பற்றாக்குறையின் கீழ், சபையின் விரிவாக்கம் மற்றும் மேம்பாட்டு சேவைகள் உட்பட சபையின் நிர்வாகப் பணிகளுக்கான பணிகளை நாங்கள் தொடர்ச்சியாகவும் திறமையாகவும் மேற்கொள்வோம். | அத்தியாவசிய சாரதி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பை விரைவுபடுத்துவதன் மூலம் சபையின் வாகனங்களை திறம்பட பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஔ) | சபையினால் நோயுற்ற மரங்களை அகற்றிய தென்னை விவசாயிகளுக்கு மாற்று பயிர் செடிகளை வழங்கியதில், 2021 ஆம் ஆண்டில் 203 விவசாயிகளின் 243.5 ஏக்கர்களக்கு கறுவா, வாழை, மிளகு, மஞ்சள் போன்ற மாற்று பயிர் செடிகள் வழங்கப்பட்டிருந்த 2022 ஆம் ஆண்டின் போது 110 விவசாயிகளுக்கு 161.75 ஏக்கர் நிலத்திற்கு மாத்திரமே மாற்று பயிர்கள் வழங்கப்பட்டு இருந்தது. | தகுதியான பயிரிடுபவர்கள் இல்லாததாலும், மாற்றுப் பயிர்களுக்கு விவசாயிகள் விருப்பம் இல்லாததாலும் திட்டமிட்ட முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. தென்னை பயிர்ச்செய்கை சபை மாற்று பயிர்களை வழங்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. | அகற்றப்பட்ட தென்னை மரங்களுக்கு பதிலாக மாற்று பயிர்களை பயிரிட ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| (க) சபையினால் 2008 ஆம் ஆண்டு முதல் தென்னை இலை அழுகல் மற்றும் இலை கருகல் நோய்க்கான தற்காலிக கள பரிசோதகர்களை சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டு, அவர்களின் சேவையை 06 மாதங்களுக்கு ஒரு தடவை நீட்டித்தது. தென் மாகாணத்திலுள்ள 408 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு 43 கள உத்தியோகத்தர்கள் மாத்திரமே மீளாய்வாண்டில் கடமையாற்றியமையினால், மேற்படி அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் போதுமானதாக இல்லாதிருந்தமையால் ஆண்டினுள் மரக் குறியிடல் தாமதமாகியமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மீளாய்வாண்டிற்கு அமைச்சின் ஒதுக்கீடு 43 கள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் 43 கள உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு மட்டுமே அமைச்சின் அனுமதி கிடைத்துள்ளது. எனவே, அதே எண்ணிக்கையில் உத்தியோகத்தர்களை நியமித்து இந்த பணி இயலுமான அளவில் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டது. | நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்த போதிய கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். |

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கட்டர்லேன்ட் தென்னந்தோட்டத்தின் வேலியை சுத்திகரிப்பதற்கான விலைக்கேள்வி ஒப்படைக்கப்பட்ட வெளி நபர்கள் இருவர், உடுகம கோட்டத்தின் வேலி தயாரிப்பின் போது, முறையான அனுமதியின்றி 2023 ஜூலை 29 அன்று தரை மட்டத்திலிருந்து இரண்டு கடகலை மரங்களை வெட்டியுள்ளனர். மற்றும 2016 ஜனவரி 17 ஆந் திகதி வெளியிடப்பட்ட CCB/Criu/CM68ND/2016-3 இலக்கமுடைய சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் மரமொன்றை வெட்டுவதற்கு ஆளும் அதிகாரம், பிராந்திய செயலாளர், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மற்றும் மற்றும் வரிசை அமைச்சின் ஒப்புதல் பெறப்பட வேண்டிய போதிலும், இவ்வாறு கெர்ட்லேண்ட் தோட்டத்தில் முறையான அங்கீகாரமின்றி வெட்டப்பட்ட இரண்டு கெட்டகேல மரங்களின் கணக்காய்வு கள ஆய்வு திகதியான 2023 ஒக்தோபர் 26 ஆந் திகதி வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது உடுகம பிரிப்பு பிரதேசத்தில் வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு உரிய அனுமதியின்றி வெட்டப்பட்ட இரண்டு மரங்கள் தொடர்பில் கெர்ட்லன்ட் தோட்ட தோட்ட அதிகாரிகள் கவனக்குறைவாகவும் முறையான கண்காணிப்பு இன்றியும் செயற்பட்டமை கணக்காய்வுகளின் போது அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக முதற்கட்ட விசாரணை நடாத்தப்பட்டு, குற்றப்பத்திரிகைகள் வெளியிடப்பட்டு, பொறுப்பான உத்தியோகத்தர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுமதியான மரங்களை கணக்கெடுத்து, பதிவேட்டுக்கு உட்படுத்தி அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியதுடன், சட்ட விரோதமாக மரம் வெட்டுவதை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தென்னை பயிர்ச்செய்கை சபையானது 2022 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கை திட்டத்தில் வெள்ளை ஈ சேதத்தை கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் கூட வெள்ளை ஈ சேதத்தை கட்டுப்படுத்த இயலவில்லை. இந்த அச்சுறுத்தலுக்கு இயற்கையான மற்றும் தற்காலிக தீர்வாக வேப்பெண்ணெய் கலவை பயன்படுத்தப்பட வேண்டும் என்றாலும், ஆண்டு இறுதி வரை வேப்பெண்ணெய் கொள்வனவு செய்யப்படவில்லை. 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில், வேப்பெண்ணெயை சவர்காரத்துடன் கலந்து தெளிப்பது போன்ற இயற்கை வைத்தியங்களை பின்பற்றுவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக அதிகமான பிரதேச செயலகங்களில் நோய் பரவியது. | 2022 ஆம் ஆண்டின் இறுதியில் வெள்ளை ஈ பாதிப்பு தொற்றுநோய் நிலைக்கு வளர்ந்தது. அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விசேட செயற்திட்ட முன்மொழிவின் மூலம், இந்த அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன. இதன்படி வேப்பெண்ணெய் உடனடியாக கொள்வனவு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு இந்த அபாய நிலைமை முற்றாக கட்டுப்படுத்தப்பட்டது. | பெறுகை நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதன் மூலம் நோய் கட்டுப்பாட்டு திட்டங்களை வெற்றிகரமாக செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | முறையான முன் பெறுகை நடவடிக்கைகள் பின்பற்றப்படாததால் 20,000 லிட்டர் வேப்பெண்ணெய் வழங்குவதற்காக 2022 திசெம்பர் 30 ஆந் திகதி சபையின் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட வழங்கல் கையளிப்புக் கடிதத்தில், 2022 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் அதாவது ஒரு நாளைக்குள் தென்னை அபிவிருத்தி பயிற்சி நிலையத்திற்கு வழங்கல் மேற்கொள்ள வழங்குநர் நிறுவனத்திற்கு அறிவித்திருந்த போதிலும், வழங்குநர் நிறுவனத்தினால் முழுமையான எண்ணெய் இருப்பினை வழங்குவதற்கு 2023 ஏப்ரல் 5 ஆந் திகதி வரை 3 மாத காலம் கடந்திருந்தது. | குறித்த விநியோக நிறுவனத்தினால் 2023.01.31 ஆந் திகதி 2062.5 லிட்டர் வேப்பெண்ணையை இருப்பு முதல் கட்டளையாக தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு கிடைத்தது. அந்த இருப்பினை அனைத்து பிரதேச அலுவலகங்களுக்கும் உடனடியாக விநியோகிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | பெறுகை நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதன் மூலம் நோய் தடுப்பு திட்டங்களை வெற்றிகரமாக செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | தென்னைப் பயிர்ச்செய்கைச் சபைக்குச் சொந்தமான GH-0804 இலக்கமுடைய லொறி லங்கா அசோக் லேலண்ட் நிறுவனத்திடம் பழுதுபார்ப்பதற்காக 2018 ஜூலை 16 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டது, | GH-0804 இலக்கமுடைய லொறி 2018 ஆம் ஆண்டு பழுதுபார்ப்பதற்காக Lanka Ashok Leyland நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டதுடன், நீண்டகாலமாக சேவையில் ஈடுபடாமல் பாழடைந்த | பழுதுபார்ப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான பணிகளை |

| | | | |
|---|---|---|---|
| | ஆனால் இந்த வாகனம் 2023 திசெம்பர் 31 வரை பழுதுபார்க்கப்பட்டு சபைக்கு பெறப்படவில்லை. மேலும், 2023 திசெம்பர் 29 அன்று அந்த நிறுவனத்திற்கு சபையால் ரூபா 1,972,927 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிலையில் இருந்த காரணத்தால் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பிற்கு உள்ளாக்கப்பட்டு பரிந்துரையை பெற்றுக்கொள்ள உத்தியோகத்தர் ஒருவரை தொடர்புகொள்வதில் ஏற்பட்ட சிரமத்தின் அடிப்படையில் மற்றும் இந்த ரகத்திலான லொறிக்களின் போட் பகுதிகளுக்கு முகவர் நிறுவனம் கிடைக்காத காரணத்தினால் மதிப்பீடு தயாரிப்பதில் தாமதமானது. முன்னர் நிலவிய விலைகளின் பழுதுபார்ப்பதற்காக ரூபா 982,476 ஆன மதிப்பீடு கொடுக்கப்பட்டிருந்தாலும், நிலவிய கொரோனா நிலைமைகளின் கீழ் உதிரி பாகங்களை இறக்குமதி செய்வதில் உள்ள சிரமம் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் காரணமாக மதிப்பிடப்பட்ட பழுதுபார்ப்பு தாமதமானது. | விரைந்து முடித்து உரிய காலத்தில் சபைக்கு மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமான PF-3332, 19-6812 மற்றும் 31-9900 இலக்கமுடைய மோட்டார் வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக இரண்டு தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்கு மேலாகியும், பழுதுபார்க்கும் பணி நிறைவடைந்து சபைக்கு பெற்றுக்கொள்ள இதுவரை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், இந்த வாகனங்களின் பழுதுபார்க்கும் பணியின் முன்னேற்றத்தை சரிபார்த்து விரைவுபடுத்த சபை நடவடிக்கை எடுத்தமை அவதானிக்கப்படவில்லை. | PF-3332 இலக்கம் கொண்ட வாகனம் 2021.09.03 ஆந் திகதி அன்று பேலியகொட நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் காப்புறுதியின் கீழ் பழுதுபார்ப்பதற்காக வாகனத்தின் முகவர் நிறுவனமான AMW நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் பழுதுபார்ப்பு தொடர்பான பெரும்பாலான உதிரிபாகங்களை அந்நிறுவனம் இறக்குமதி செய்ய முடியாமல் போனதால் பழுது நீக்குவதில் நீண்ட காலம் தாமதமாகி வருகிறது. இந்த பழுதுபார்ப்பில் தெளிவான முன்னேற்றம் இல்லாததால், தேவையான பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு நிறுவனத்திற்கு வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பழுதுபார்ப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான பணிகளை விரைந்து முடித்து உரிய காலத்தில் சபைக்கு மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சபைக்கு சொந்தமான நாற்றுமேடை மற்றும் மாதிரித் தென்னந்தோப்புகளின் வருடாந்திர உரத் தேவைக்காக 708,175 மெட்ரிக் டன் அளவான 9 வகையான உரங்களை விநியோகிக்கும் ஒப்பந்தம் 2016 ஒக்தோபர் 25 ஆம் திகதி ஒரு தனியார் நிறுவனத்திற்கு போக்குவரத்துக் கட்டணத்துடன் ரூபா 19,733,982 செலுத்தப்பட்டதுடன், உர | தரமற்ற உரங்களை விரைவில் அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தரமான உரங்களை கொள்வனவு செய்து, சரியான நேரத்தில் மாதிரி தென்னந்தோப்பு மற்றும் நாற்று மேடைகளுக்கு உரங்களை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விநியோகத்தின் போது நியமத்திற்கு அமைவாக காணப்படாத உரங்களின் 9 ரகங்களில் 83,502.1 கிலோ சபையின் 39 நாற்றுமேடைகள் மற்றும் 7 மாதிரி தென்னந்தோப்புகளில் களஞ்சியப்படுத்தப்பட்டு ஏறக்குறைய 7 ஆண்டுகள் கடந்தும், உரத்தை திருப்பி அனுப்புவதற்கு சபை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கவில்லை. | | |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பாசிக்குடா உத்தியோகத்தர் குடியிருப்பு ஒன்றின் கட்டுமானத்திற்காக செலவழிக்கப்பட்ட ரூபா 14,204,853 தொகை 5 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறை வேலை கணக்கில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும்,இந்த கட்டுமான பணி மீளாய்வாண்டின் இறுதி வரை நிறைவு செய்யப்படவில்லை. | பாசிக்குடா சுற்றுலா உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ இல்லம் நிர்மாணிப்பது தொடர்பில் நடைமுறை வேலை கணக்கில் ரூபா 14,204,853 மில்லியன் தொகையானது முடிக்கப்பட்ட பணிகளின் தொகைக்கு மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள பணிகள் புதிய ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் நிறைவேற்றப்படுவதால், அதற்குரிய கணக்கு பதிவுகளை 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட வேலை திட்டத்தின் கீழ் கட்டுமானம் சரியான நேரத்தில் மற்றும் திறமையான முறையில் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 2 கப்துருபாயாக்களை நிர்மாணிப்பதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு ரூபா 266,778 ஆலோசனைக் கட்டணமாக் செலுத்தியிருந்தது, ஆனால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த கட்டுமானப் பணிகள் நிறைவ செய்ய அல்லது செலத்திய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பிடிருக்கவில்லை. | ரூபா 266,778 தொகைக்கு உரியதாக மட்டக்களப்பு மற்றும் மாரவில பிராந்திய அலுவலகங்கள் நிர்மாணிக்கப்படாததால், அந்த பெறுமதி 2023 ஆம் ஆண்டுக்கான நடைமுறை வேலை கணக்கிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிர்மாணம் இடம்பெறாத கட்டிடங்களுக்கு செலுத்திய ஆலோசனைக் கட்டணத்தை மீள வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டு நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பிரதேச அலுவலகத்திற்கு சொந்தமான தேவபுரம் தென்னை மர நாற்றுமேடையின் பொறுப்பான உத்தியோகத்தர் குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 263,450 செலுத்தப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்ய அல்லது சலுத்தப்பட்ட பணம் | யாழ்ப்பாணம் பிரதேச அலுவலகத்திற்கு சொந்தமான தேவபுரம் தென்னை மர நாற்றுமேடையின் பொறுப்பான உத்தியோகத்தர் குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்ட பெறுமதிக்குரிய பணிகள் நிறைவடைந்துள்ளதால், நடைமுறை வேலை கணக்கில் குறிப்பிடப்பட்ட ரூபா 263,450 பணம் மூலதனமாக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட வேலை அட்டவணையின் கீழ் கட்டுமானம் சரியான நேரத்தில் மற்றும் செயற்திறமையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (ஈ) | மொத்த ஒப்பந்த மதிப்பான ரூபா 488,845 நடைமுறை வேலை கணக்கில் வரவு வைக்கப்பட்டு, ஒப்பந்தக் கடன் கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ள போதிலும், 4 ஆண்டுகள் கடந்தும் முழு ஒப்பந்தமும் நிறைவு செய்யப்பட்டிராததுடன், முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 97,769 கொடுக்கப்பட்டவை அறவிடுவதற்கு அல்லது கட்டுமானப் பணிகள் நிறைவு செய்ய சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில், கம்பஹா இதிகொல்ல விடுதியின் நிர்மாணப் பணிகளை உரிய முறையில் சீராக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | திட்டமிடப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் சரியான நேரத்தில் மற்றும் செயற்திறனான முறையில் கட்டுமானத்தை மேற்கொள்வதற்கும் ஒப்பந்த கொடுப்பனவுகளை துல்லியமாக கணக்கிடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில், நோய் மற்றும் பூச்சிக் கட்டுப்பாட்டுத் நிகழ்ச்சிதிட்டங்களுக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ரூபா 13.75 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன், அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 5 மில்லியன் பெறப்பட்டது. தென்னைச் செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக நோய் மற்றும் பூச்சிக் கட்டுப்பாடு தொடர்பில் சபை அதிக கவனம் செலுத்த வேண்டியிருந்தாலும், திட்டமிட்ட இலக்குகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் இது தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. | தென்னை பயிர்ச்செய்கை சபையின் களத்தில் தமது கடமைகளை மேற்கொள்ளும் கள உத்தியோகத்தர்கள் மோட்டார் சைக்கிளிலேயே களத்திற்கு அடிக்கடி பயணிக்கின்றனர். 2022 ஏப்ரல் மாதத்தின் பிறகு, நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் களப்பணிக்கு செல்வதற்கு களப்பணியாளர்களுக்கு போக்குவரத்து வசதி செய்து தருவதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டது. | தென்னை பயிர்ச்செய்கையின் விளைச்சலை அதிகரிக்க, நோய் மற்றும் பூச்சி கட்டுப்பாடுகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுவதன் கீழ், சபையால் முறையே 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட பாசிக்குடா மற்றும் குருநாகல் உத்தியோகத்தர் குடியிருப்புகளின் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்படாத காரணத்தால் 7 | குருநாகல் பிராந்திய முகாமையாளர் உத்தியோகத்தர் குடியிருப்பு மற்றும் பாசிக்குடா உத்தியோகத்தர் குடியிருப்புகளை நிர்மாணிக்கும் போது ஏற்பட்ட சிக்கல் நிலைமைகள் காரணமாக நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு கணிசமான கால அவகாசம் எடுக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட வேலை அட்டவணையின் கீழ் கட்டுமானம் சரியான நேரத்தில் மற்றும் செயற்திறமையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கும் மேலாக கட்டுமானங்கள் சேதமடைந்தவாறு உள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 6 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. | | |
| (இ) | நிதியுதவி வழங்குவதன் மூலம் தென்னை காணிகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தின் கீழ், கப்ருக முதலீட்டுக் கடன் திட்டத்தின் கீழ் பிணை வழங்குவதற்காக ரூபா 29 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் 492 காணிகளுக்கு ரூபா 20.89 மில்லியன் பிணை காப்பு மட்டுமே வழங்கப்பட்டது. 800 பயனாளிகளுக்கு வட்டி நிவாரணம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 520 பயனாளிகளுக்கு மாத்திரமே அதாவது இலக்குத் தொகையில் 65 சதவீதத்திற்கு மாத்திரம் கப்ருகா முதலீட்டுத் திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டில் வட்டி நிவாரணம் வழங்கப்பட்டது. மேலும், தகவல் முகாமைத்துவ தரவு முறைமையைப் புதுப்பிப்பதற்காக ரூபா 1 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் மேற்படி செயற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில், நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு, வட்டி நிவாரணத்திற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது குறைவாக இருப்பதால், பௌதீக இலக்குகளை அடைவது கடினமாகிவிட்டது. மேலும், ஒரு விவசாயிக்கு ஒரு திட்டத்துடன் தொடர்புடைய கடன் தவணைகளின் தொகைக்கு ஏற்ப வட்டி சலுகைகள் தனித்தனியாக வெளியிடப்பட்டாலும், பௌதீக முன்னேற்றத்தைக் கணக்கிடுவதில் ஒரு விவசாயி ஒரு செயற்திட்டமாக கருதப்படுவதால், நிதி இலக்கு எட்டப்பட்டாலும், பௌதீக இலக்குகள் குறைவாகவே பதிவு செய்யப்படும். | திட்டங்களை சரியாக தயாரிப்பதற்கு மற்றும் இலக்கிடப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2019 ஆம் ஆண்டில் கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் அண்மித்ததாக முக்கியமாக காணப்பட்ட வெள்ளை ஈ எனப்படும் பூச்சி தொடர்ந்து அதிகரித்து, 2022 ஆம் ஆண்டில், கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, புத்தளம், குருநாகல், இரத்தினபுரி, கண்டி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் வேகமாக பரவியிருந்தது. வெள்ளை ஈ பூச்சியின் பாதிப்பைக் கட்டுப்படுத்த தென்னை பயிர்ச்செய்கை சபை 2022 செயல்திட்டத்தில் இருந்து ரூபா 85.5 மில்லியன் ஒதுக்கீடு செய்து, இலங்கை முழுவதும் உள்ள தென்னை விவசாயிகள் மீது கவனம் செலுத்தி, நோயை கட்டுப்படுத்தும் பணிகள் அதன் கீழ் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வினால் மாதிரிப் பரிசோதனைக்காக தெரிவு செய்யப்பட்ட பிரசேத | வெள்ளை ஈ கட்டுப்பாடு தொடர்பான விசேட செயற்திட்டத்தின் அடிப்படை பௌதீக செயல்பாடுகளின் அடிப்படையானது 2022 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. மேலும், செயற்பாடுகளுக்கு தேவையான உபகரணங்களை வாங்குவது தொடர்பான பெறுகை பணிகள் உள்ளடங்களான ஏனைய பௌதீக பணிகள் 2022 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மேற்கொள்ள முடிந்தது. | திட்டங்களைச் சரியாகத் தயாரித்து, இலக்கிடப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகங்களிலிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டினும் மேற்படி செயற்திட்டம் தொடர்பில் நிதி செலவினமொன்று ஏற்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின்படி, வெள்ளை ஈ சேதத்தை கட்டுப்படுத்தும் செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா 85.5 மில்லியன் மீளாய்வாண்டில் முழுமையாக செலவிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | | |
| (உ) | அமைச்சின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி வெலிகமவில் இலை வாடல் மற்றும் அழுகல் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு 2022 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட ரூபா 111.14 மில்லியன் ஒதுக்கீட்டில் இருந்து ரூபா 45.13 மில்லியன் பெறப்பட்டு, ஆண்டு இறுதிக்குள் ரூபா 37.333 மில்லியன் செலவிடப்பட்டது. இதன்படி, சபைக்கு கிடைத்த ஒதுக்கீட்டில் ரூபா 7.79 மில்லியன் அல்லது 17 வீதம் பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருந்தது. | 2022.12.06 ஆந் திகதி வெலிகம இலை வாடல் மற்றும் அழுகும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக ரூபா 8.570 மில்லியன் தொகை தென்னைப் பயிர்ச்செய்கைச் சபைக்கு பெற்றுக்கொண்டதுடன், அதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு உரிய ஏற்பாடுகள் இயன்றவரை செலவிடப்பட்ட போதிலும் ஆண்டின் கடைசி சில வாரங்களில் எதிர்பார்க்கப்பட்ட சில செயல்பாடுகளில் முன்னேற்றமாக 100% ஐ எட்ட முடியவில்லை. இதன்படி, ரூபா 7.79 மில்லியன் எஞ்சியுள்ளதுடன், அந்த ரூபா 7.79 மில்லியன் நிதியானது 2023 ஆம் ஆண்டுக்குரிய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | நிதியேற்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்தவும், நோய்க் கட்டுப்பாட்டை விரைவுபடுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | நோயுற்ற இலையுதிர் மற்றும் அழுகிய பகுதியிலுள்ள நோய்வாய்ப்பட்ட மரங்களை அகற்றிய விவசாயிகளுக்கு பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்துடன் பசுமை குந்திரா நாற்றுகளை வழங்கவும், நோய் குறைந்த பகுதிகளுக்கு கலப்பின தென்னை செடிகளை வழங்கவும், தென்னை விவசாயிகளின் மாற்றுப் பயிர்களை வழங்கவும் 2022 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கை திட்டத்தில் இருந்து ரூபா 6.1 மில்லியன் செலவினம் திட்டமிடப்பட்டிருந்தாலும், மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 4 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டது. | திட்டமிட்டபடி முன்னேற்றத்தினை அடைந்துகொள்ள முடியாமைக்கு, தகுதியான விவசாயிகள் இல்லாததாலும், மாற்றுப் பயிர்களுக்கு விவசாயிகள் விருப்பம் இல்லாமையும் காரணமாக அமைந்திருந்தது. | அகற்றப்பட்ட தென்னை மரங்களுக்கு பதிலாக நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட செடிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | நாடு முழுவதும் உள்ள தென்னை காணிகளின் அளவை அதிகரிப்பதற்கும் பராமரிப்பதற்கும் ரூபா 250.68 மில்லியன் | 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 7.5 மில்லியன் தென்னை நாற்றுகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டது. மரக்கன்று இலக்கை அடைய | நாட்டிலுள்ள தென்னை காணிகளின் அளவை சரியாக |

ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டில் விதை தேங்காய் வழங்கல் மற்றும் தென்னை மரக்கன்றுகளை நடுவதற்காக ரூபா 113.05 மில்லியன் மட்டுமே கிடைத்துள்ளதுடன், இத்திட்டத்தின் கீழ் 2 மில்லியன் தென்னை மரங்கள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் விதை தென்னங் கன்றுகள் சுமார் 6 இலட்சம் அதாவது 32 சதவீதம் குறைவாக விற்பனை செய்யப்பட்டது. மேலும், அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 1.6 மில்லியன் விதை தென்னை நாற்றுகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், 9 லட்சம் விதை தென்னை நாற்றுகள், அதாவது இலக்குத் தொகையில் 56 சதவீதம் மட்டுமே வழங்கப்பட்டது.

தேவையான விதைகள் தென்னை நாற்றுமேடைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு வரும் நிலையில், நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மை காரணமாக, மரக்கன்றுகள் பெற திட்டமிட்டிருந்த ஹரித தெயக் மற்றும் கம சமஹ பிளிசந்தரக் நிகழ்ச்சிதிட்டங்களை அரசு இரத்து செய்தது. மேலும், பரவலாக்கப்பட்ட நிதியின் கீழ் மாவட்ட செயலாளர்களால் வழங்கப்பட இருந்த மரக்கன்றுகளும் நிராகரிக்கப்பட்டன. இந்த நிலையில், அதிக அளவு நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதால், 75 மில்லியன் நாற்றுகளுக்கான விதை தேங்காய் போக்குவரத்து உடனடியாக நிறுத்தப்பட்டது. ஆனால் அப்போதும், 5 மில்லியனுக்கு ஏற்ற விதை தென்னை 7.1 மில்லி விதை தேங்காய் கொண்டு செல்லப்பட்டிருந்தது. இதன்படி, 2022 ஆம் ஆண்டுக்கு உரியதாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் நாற்றுமேடைகளில் 5.00 மில்லியன் தென்னை நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டவாறு உள்ளன.

திட்டமிடப்பட்ட இலக்குகளுடன் அதிகரிப்பதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.